ஒரு மதிப்பெண் வினாத்தேர்வு

பத்தாம் வகுப்பு – கணிதம்

பாடம் – 2 தேர்வு - 2

தயாரிப்பு : ப. இளங்கோவன்

பட்டதாரி ஆசிரியர், அரசு உயர்நிலைப் பள்ளி

வடவாம்பலம் விழுப்புரம் மாவட்டம்

1. 65 மற்றும் 117 – யின் மீ. பொ. வ -வை $65\ m - 117$ என்ற வடிவில் எழுதும் பொது m -யின் மதிப்பு

(அ) 4 (ஆ) 2 (இ) 1 (ஈ) 3

2. $t_1, t_2, t_3, ...$ என்பது ஒரு கூட்டுத் தொடர்வரிசை எனில் $t_6, t_{12}, t_{18}, ...$என்பது

(அ) ஒரு பெருக்குத் தொடர்வரிசை

(ஆ) ஒரு கூட்டுத் தொடர்வரிசை

(இ) ஒரு கூட்டுத் தொடர்வரிசையுமல்ல, பெருக்குத் தொடர்வரிசையுமல்ல

(ஈ) ஒரு மாறிலித் தொடர்வரிசை

3. ஒரு கூட்டுத் தொடர்வரிசையில் 31 உறுப்புகள் உள்ளன. அதன் 16-வது உறுப்பு m எனில், அந்தக் கூட்டுத் தொடர்வரிசையில் உள்ள எல்லா உறுப்புகளின் கூடுதல்

(அ) $16\ m$ (ஆ) $62\ m$ (இ) $31m$ (ஈ) $\frac{31}{2}m$

4. ஒரு கூட்டுத் தொடர்வரிசையில் முதல் உறுப்பு 1 மற்றும் பொது வித்தியாசம் 4. இந்தக் கூட்டுத் தொடர்வரிசையின் எத்தனை உறுப்புகளைக் கூட்டினால் அதன் கூடுதல் 120 கிடைக்கும்

(அ) 6 (ஆ) 7 (இ) 8 (ஈ) 9

5. $F_1 = 1, F_2 = 3$ மற்றும் $F_n = F_{n-1} + F_{n-2}$ என கொடுக்கப்படின் F_5 ஆனது

(அ) 3 (ஆ) 5 (இ) 8 (ஈ) 11

6. $A = 2^{65}$ மற்றும் $B = 2^{64} + 2^{63} + 2^{62} + \cdots + 2^0$ எனக் கொடுக்கப்பட்டுள்ளது. பின்வருவனவற்றில் எது உண்மை?

(அ) B ஆனது A ஐ விட 2^{64} அதிகம் (ஆ) A மற்றும் B சமம்

(இ) B ஆனது A ஐ விட 1 அதிகம் (ஈ) A ஆனது B ஐ விட 1 அதிகம்

7. $7^{4k} \equiv$ _____(மட்டு 100)

(அ) 1 (ஆ) 2 (இ) 3 (ஈ) 4

8. யூக்ளிடின் வகுத்தல் துணைத் தேற்றத்தைப் பயன்படுத்தி, எந்த மிகை முழுவின் கணத்தையும் 9 ஆல் வகுக்கும் பொது கிடைக்கும் மீதிகள்

(அ) $0, 1, 8$ (ஆ) $1, 4, 8$ (இ) $0, 1, 3$ (ஈ) $1, 3, 5$

9. $\frac{3}{16}, \frac{1}{8}, \frac{1}{12}, \frac{1}{18}, ...$என்ற தொடர்வரிசையின் அடுத்த உறுப்பு

(அ) $\frac{1}{24}$ (ஆ) $\frac{1}{27}$ (இ) $\frac{2}{3}$ (ஈ) $\frac{1}{81}$

10. 1729 – ஐ பகாக் காரணிப் படுத்தும்போது, அந்தப் பகா எண்களின் அடுக்குகளின் கூடுதல்

(அ) 1 (ஆ) 2 (இ) 3 (ஈ) 4

LIVEWORKSHEETS